பக்கங்கள்: 10

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 07 வெள்ளிக்கிழமை 22.11.2024 கதிர் 015



## டக்ளஸை கைது செய்ய உத்தரவு

மீன்பிடித்துறைமுன்னாள்அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைக் கைது செய்யும்படி கொழும்பு நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

தானே தாக்கல் செய்த வழக்கில் சாட்சியமளிப்பதற்கு வழங்கப்பட்ட இறுதிச் சந்தர்ப்பத்திலும் அவர் நீதிமன்றத்திற்கு வராத ☞ 2

### நாடாளுமன்றத்தில்

## மாவீரர் நாளுக்காக கூட்டம் தள்ளிவைப்பு

பத்தாவதுநாடாளுமன்றத்தின்முதலாவதுஅமர்வுக்கான நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பதற்கான நாடாளுமன்ற அலுவலர்கள் குறித்த கூட்டத்தை மாவீரர் தினங்களான நவம்பர் 26, 27 ஆகிய நாள்களில் கூட்டாமல் நவம்பர் 28 கூட்டுவதற்கு கட்சித் தலைவர்கள் இணங்கியுள்ளனர்.

பத்தாவது பாராளுமன்றத்தின் கன்னி அமர்வு நேற்று நடைபெற்றது. முதலில் சபாநாயகர், பிரதி சபாநாயகர், குழுக்களின்பிரதித்தலைவர்தெரிவுகள் இடம்பெற்றிருந்தன.

இதனையடுத்து, புதிதாக தெரிவு செய்யப்பட்ட சபாநாயகர் அஷோக்க ரன்வெலவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வாழ்த்துக்களைத் தெரிவித்தார். அவரைத் தொடர்ந்து மு.கா.தலைவர் ரவூப் ஹக்கீம் வாழ்த்துத் தெரிவித்தார். அவர்களைத்தொடர்ந்து சிவஞானம் சிறிதரன், நாமல் ராஜபக்ச ஆகியோரும் தமது வாழ்த்துக்களைத் தெரிவிக்க விருப்பம் வெளியிட்டனர். ஆனால் நேரமின்மை காரணமாக அவர்களின் ☞ 2

## இனி இது ரகசியம் அல்ல!

சம்பந்தனின் மகளும் முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் உடனடியாகஅரசமாளிகைகளிலிருந்து வெளியேறிஅவற்றைஆளும்தரப்பிடம் ஒப்படைக்கும்படிநீதி, பொதுநிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபை, உள்ளூராட்சி மற்றும் தொழிலாளர் அமைச்சு புதன்கிழமை எழுத்து மூலம் அறிவித்துள்ளது.

அரசஇல்லங்கள்,சொகுசுவிடுதிகள், மாளிகைகளைக் கையளிக்காத முன்னாள் அமைச்சர்கள் பட்டியலில் இவர்கள் இருவரின் பெயர்களும் முன்னணியில் இருக்கின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

சம்பந்தனின் மகள், தனது தந்தைக்குவழங்கப்பட்டமாளிகையை நவம்பர்12கையளிப்பதாகஅமைச்சுக்கு கடிதம் மூலம் அறிவித்திருந்தார். இந்தப் பத்தியில் அதனையும் தெரியப்படுத்தியிருந்தோம். ஆனால் இதுவரைவீடுகையளிக்கப்படவில்லை.

சம்பந்தன்ஜூலைமுதல்நாளன்று காலமானார். அவர் இறந்த பிறகு, சம்பந்தனின்குடும்பஉறுப்பினர்களே அந்த மாளிகையில் தொடர்ந்து தங்கியுள்ளனர்.

இரா.சம்பந்தன்எதிர்க்கட்சித் ☞ 2

# இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை அடியொற்றியே புதிய அரசமைப்பு

## புதுடில்லி உறுதிப்படுத்தவேண்டும் என்று தமிழ் அரசுக் கட்சி எம்.பிக்கள் வலியுறுத்து



புதிய அரசமைப்பு இந்திய இலங்கை ஒப்பந்தத்தை அடியொற்றி தமிழர்களுக்கு உரிமைகளை வழங்குவதை உறுதிப்படுத்த வேண்டும் என்று தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இலங்கையில் இனப் பிரச்சினைக்குத்தீர்வுவழங்குவதற்கான அழுத்தங்களைஅரசுத்தலைவர் அநுரகுமார திசநாயக்கவின் ஆளும் தரப்பால் முன்வைக்கப்படவுள்ள அநுரகுமார திசநாயக்கவின் ஆளும் தரப்புக்கு வழங்கவேண்டும் ☞ 2

## தேசியப் பட்டியலில் நளீம் எம்.பியானார்

பொதுத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்ட எம்.எஸ்.நளீம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியப் பட்டியல் உறுப்பினர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொதுத் தேர்தலில் தனித்தும் ஐக்கிய மக்கள் சக்தியுடன் சேர்ந்தும் போட்டியிட்டது. தனித்துப் போட்டியிட்டதன் மூலம் அந்தக் கட்சி 87 ஆயிரத்து 38 வாக்குகளைப் பெற்று ஒரு தேசியப் பட்டியலைப் பெற்றது.

## பணவீக்கம் வீழ்ச்சி

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்படி, இலங்கையின் பணவீக்கம் ஒக்டோபர் மாதத்தில் -0.7 வீதமாகவும், உணவுவகைபணவீக்கம்1.3வீதமாகவும் குறைந்துள்ளதாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் அறிவித்துள்ளது.

செப்டெம்பர் மாதத்தில் இலங்கையின் பணவீக்கம் -0.2 வீதமாகவும், உணவு வகை பணவீக்கம் செப்டெம்பர் மாதத்தில் - 0.5 வீதமாகவும் காணப்பட்டதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

உணவுஅல்லாதபிரிவின்பணவீக்கம் செப்டம்பரில் -0.7 சதவீதத்தில் இருந்து அக்டோபரில் -2.3 சதவீதமாக குறைந்துள்ளதாகவும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.



## பிரதி அமைச்சர்களில் ஐந்து பேர் கலாநிதிகள்

அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்கவின் ஆளும் தரப்பில் 22 அமைச்சர்களுக்கு மேலதிகமாக 29 பிரதிநி அமைச்சர்கள் நேற்று நியமிக்கப்பட்டனர். அவர்களில் ஐவர் கலாநிதிப் பட்டம் பெற்றவர்கள்.

ஒரு பேராசிரியர், இரண்டு சட்டத்தரணிகள் மற்றும் ஒரு பொறியியலாளர் ஆகியோரும் பிரதி அமைச்சர்கள் குழுவில் உள்ளடங்கியுள்ளனர்.

கலாநிதிகளான நாமல் சுதர்ஷன, பிரசன்ன குமார குணசேன, ☞ 2

## வீட்டில் தனித்திருந்த மூதாட்டி படுகொலை

### நகைகளும் கொள்ளை

கிருலப்பனை, கலிங்க மாவத்தையிலுள்ள கொலோம்தோட்டைசரசவிஉயனஅடுக்குமாடி குடியிருப்பின் இரண்டாவது மாடியில் உள்ள ☞ 2

## நாணய நிதிய ஒப்பந்த சீரமைப்புக்காக இணைந்து செயற்படுவதற்குத் தயார்

### நாடாளுமன்றில் எதிர்க் கட்சித் தலைவர் அறிவிப்பு

சர்சதேச நாணய நிதியத்தின் உடன்பாடுகளை மறுசீரமைத்து மக்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்காக ஆளும்தரப்புடன்டன்இணைந்து செயற்படுவதற்கு தயாராக உள்ளதாக எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பத்தாவதுபாராளுமன்றத்தின் கன்னிஅமர்வின் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் உரையானது மிகத்தெளிவாக புதிய பாதையில் செல்வதை நோக்கியதாகவே அமைந்திருந்தது. அவரது உரையின்பிரகாரம்செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம்.

பொருளாதார எழுச்சி விடயத்தில் பொதுமக்கள் அளித்த ஆணைக்குஅமைவாகதிட்டங்கள் முன்வைக்கப்படவில்லை. சர்வதேச நாணய நிதியத்தினை அடியொற்றியதாகவே அவர்களது பயணம் இருக்கும் என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆளும்தரப்புத் தயாராக இருக்குமாகஇருந்தால்மக்களுக்கு பொருத்தமாகசர்வதேசநாயணய நிதியத்தின் உடன்பாட்டை ☞ 2

## எதிர்க் கட்சி தலைவரின் ஆசனத்தை விட்டுக்கொடுக்காத அருச்சுனா எம்.பி.

நாடாளுமன்றசம்பிரதாயப்படி எதிர்க் கட்சித் தலைவர் அமரும் ஆசனத்தில் நேற்று சென்றமர்ந்த யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அருச்சுனா, பணியாளர்கள் வந்து கேட்டுக்கொண்டபின்னரும்அந்த இடத்தைவிட்டு நகரவில்லை.

இதனால் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வேறொரு இருக்கையில் அமர்ந்திருந்தார்.

நாடாளுமன்றத்தில் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

தலைவர் பதவியை விட்டு விலகியதன் பின்னரும்அவரதுவயதுமூப்பைக்கருதிஅவர் இந்த மாளிகையைத் தொடர்ந்து பயன்படுத்த ரணில் தலைமையிலான ஆளும்தரப்பு அப்போது அனுமதி வழங்கியிருந்தது.

முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் அமைச்சராக இருந்தபோது வழங்கப்பட்ட மாளிகையல் தொடர்ந்தும் தங்கியுள்ளார்.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## இந்திய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் 8 நாடாளுமன்ற உறுப்பினர்களும் நேற்று இந்திய உயர் ஆணையர் சந்தோஷ் ஜாவை கொழும்பில் சந்தித்துப் பேசியபோது வலியுறுத்தினர்.

அதேநேரம் தமிழ்க் கட்சிகள் ஒற்றுமையோடு இல்லாத காரணத்தால் வடக்கில் தமிழ் நாடாளுமன்றப் பிரதிநித்துவம் இழக்கப்பட்டதுஎன்றுஇந்தியஉயர்ஆணையர் சுட்டிக்காட்டினார். இந்தக் காரணத்திற்காகவே இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் மற்றும் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவால் ஆகியோர் தமிழ்க் கட்சிகளை ஓரணியாகப் போட்டியிடுமாறு ஆலோசனை கூறினர் என்றும் சுட்டிக்காட்டினர்.

வடக்கில் தமிழர் பிரதிநிதித்துவம் குறைந்தபோதும் மக்கள் தமிழ்த் தேசியத்திற்கு எதிராக வாக்களிக்கவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் புள்ளிவிவரங்களோடு விளக்கியதை இந்திய உயர் ஆணையர் ஏற்றுக்கொள்ளவில்லை. எது எப்படியிருப்பினும் தமிழ்க் கட்சிகள் தனித் தனியே போட்டியிட்டதன் விளைவாக ஆசனங்கள் இழக்கப்பட்டிருக்கின்றன என்பதே உண்மை என்று அவர் திருப்பி அழுத்திக்கூறினார்.

அபிவிருத்தித்திட்டங்களைமுன்னெடுத்தல், முதலீடுகளைமேலும்அதிகரித்தல், இளைஞர், யுவதிகளின் திறன்களை மேம்படுத்தல் உள்ளிட்ட விடயங்களில் இந்தியாவின் பங்களிப்பையும் ஒத்துழைப்பும் தொடர்ந்தும் வழங்கப்படவேண்டும் என்று தமிழ் அரசுக் கட்சிநாடாளுமன்றஉறுப்பினர்கள்கோரிக்கை விடுத்தனர்.

தமிழ் மக்களின் இனப்பிரச்சினைத் தீர்வு மற்றும்பொறுப்புக்கூறல்சார்ந்தவிடயங்களில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை, மற்றும்இந்தியா ஆகிய இரண்டுதரப்புக்களால் மட்டும்தான் இலங்கைக்கு அழுத்தங்களை வழங்க முடியும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர். இந்தியா அதற்கான செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

ஆளும்தரப்பு புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்கவுள்ளதாகக் கூறிவருகின்ற நிலையில்,புதியஅரசமைப்பினைஅவர்களுக்கு வேண்டிய வகையில் உருவாக்குவதற்கான பெரும்பன்மைப் பலம் அவர்களுக்கு உள்ளது. ஆகவே தமிழர்களின் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்யும் வகையில், இந்திய, இலங்கை ஒப்பந்தத்தினை அடியொற்றியதாக அந்த முயற்சிகள் இடம்பெற வேண்டும் என்பதை இந்தியா உறுதிப்படுத்த வேண்டும் என்றும் தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

மேலும், தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளாத அரசமைப்பினை ஆளும்தரப்பு முன்னகர்த்துமாக இருந்தால் அதற்கு எதிராக வடக்கு, கிழக்கு மக்கள் நிச்சயமாக தமது திரட்சியான எதிர்ப்பினை வெளியிடுவார்கள் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

தற்போதைய அரசியல் முன்னேற்றங்கள் குறித்தும் தமிழர்களின் அரசியல் குறித்தும் புதுடில்லியுடன் பரந்துபட்ட கலந்துரையாடலுக்கான வாய்ப்பொன்றை பெற்றுத்தருமாறும் உயர்ஆணையரிடத்தில் அவர்கள் கோரிக்கை முன்வைத்தனர்.

## பிரதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹர்ஷன சூரியப்பெரும, மதுர செனவிரத்ன, சுசில் ரணசிங்க, சட்டத்தரணிகளான டி.பி.சரத், சுனில் வதகல, பொறியியலாளர்களான எரங்க வீரரத்ன, ஜனித் ருவன் கொடித்துவக்கு, பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ ஆகியோருக்கு பிரதி அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

அரசுத் தலைவர் முன்பாக நேற்றுப் பதவியேற்றுக்கொண்ட பிரதி அமைச்சர்கள் விவரம் வருமாறு:

01 . பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ - பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் -

02. நாமல் கருணாரத்ன - விவசாயம் மற்றும் கால்நடை பிரதி அமைச்சர் -

03. வசந்த பியதிஸ்ஸ கிராம அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் பிரதி அமைச்சர்

04. நலின் ஹெவகே - தொழிற்கல்வி பிரதி அமைச்சர்

05. ஆர். எம். ஜயவர்தன - வர்த்தகம், வர்த்தகம், உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர்

06. கமகெதர திசாநாயக்க - புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர்

07. சட்டத்தரணி டி. ப.சரத் - வீடமைப்பு பிரதி அமைச்சர்

08. ரத்ன கமகே - கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வள பிரதி அமைச்சர்

09. மஹிந்த ஜயசிங்க - தொழிலாளர் பிரதி அமைச்சர்

10. அருண ஜயசேகர - பாதுகாப்பு பிரதி அமைச்சர்

11. அருண் ஹேமச்சந்திர - வெளிவிவகார பிரதி அமைச்சர், வெளிநாட்டு வேலைவாய்ப்பு

12. அன்ரன் ஜெயக்கொடி - சுற்றுச்சூழல் துணை அமைச்சர்

13. முகமது முனீர் - தேசிய ஒருங்கிணைப்பு துணை அமைச்சர்

14. பொறியியலாளர் எரங்க வீரரத்ன - டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர்

15. எரங்க குணசேகர - இளைஞர் விவகார பிரதி அமைச்சர்

16. சதுரங்க அபேசிங்க - கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி பிரதி அமைச்சர்

17. பொறியியலாளர் ஜனித் ருவான் கொடித்துவக்கு - துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் பிரதி அமைச்சர்

18. கலாநிதி நாமல் சுதர்சன் - பெண்கள் மற்றும் சிறுவர் விவகார பிரதி அமைச்சர்

19. ருவன் செனரத் - மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி பிரதி அமைச்சர்

20. கலாநிதி பிரசன்ன குமார குணசேன - போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர்

21. மருத்துவர் ஹன்சக விஜேமுனி - சுகாதார மற்றும் ஊடக பிரதி அமைச்சர்

22. உபாலி சமரசிங்க - கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர்

23. ருவன் சமிந்த ரணசிங்க - சுற்றுலா பிரதி அமைச்சர்

24. சுகத் திலகரத்ன - விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர்

25. சுந்தரலிங்கம் பிரதீப் - தோட்டங்கள் மற்றும் சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர்

26 சட்டத்தரணி சுனில் வட்டகல - பொது பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார பிரதி அமைச்சர்

27. கலாநிதி மதுர செனவிரத்ன - கல்வி மற்றும் உயர் கல்வி பிரதி அமைச்சர்

28. கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும - நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர்

29. கலாநிதி சுசில் ரணசிங்க - காணி மற்றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சர்

இவர்களின் பதவியேற்பு நிகழ்வில் அரசுத் தலைவரின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவும் கலந்துகொண்டார்.

## வீட்டில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீடொன்றில் 70 வயதான மூதாட்டி தனியாக இருந்தவேளை நேற்று பிற்பகல் படுகொலை செய்யப்பட்டார்என்றுகிருலப்பனைபொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வீட்டில் இருந்த சுமார் 8 பவுன் தங்கமும் கொள்ளையிடப்பட்டிருப்பதுமுதல்பார்வையில் தெரிகிறது என்று போலீசார் கூறுகின்றனர்.

கமலா சின்னம்மா என்ற பெண்ணே படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

படுகொலை செய்யப்பட்ட வயோதிபப் பெண் தனது கணவர், மகள் மற்றும் பேத்தியுடன் அந்த வீட்டில் வசித்து வருகிறார். காலை 7.00 மணியளவில் அவரது மகள் பேத்தியை பாடசாலையில் விட்டுவிட்டு அவரும் வேலைக்குச் சென்றுவிட்டார் எனவும் காலை 10 மணியளவில் கணவரும் வியாபாரத் தேவைக்காக மொரட்டுவைக்கு செல்வதாக கூறி வீட்டிலிருந்து சென்றிருந்தார் என்றும், கொலையுண்ட பெண் மாத்திரமே வீட்டில் இருந்தார் என்றும் பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

## டக்ளஸை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரணத்தால் அவரைக் கைது செய்யும்படி மேலதி நீதிவான் உத்தரவிட்டார்.

வெள்ளவத்தையைச் சேர்ந்த சுப்பிரமணியன் மனோகரன் என்ற வர்த்தகர் 2016 ஜீலை 9 நாளிட்டு 2 கோடி ரூபாய் பெறுமதியான இரண்டு காசோலைகளை வழங்கிமோசடிசெய்தார்என்றுஇந்தவழக்கை டக்ளஸ் தேவானந்தா தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கில் அவர் சாட்சியமளிப்பதற்கான இறுதி நாள் நேற்றாகும். ஆனால் அவர் நீதிமன்றத்திக்கு வருகை தரவில்லை.

டக்ளஸ் தேவானந்தாவுக்கு சுகயீனம் என்பதால் அவரால் நீதிமன்றத்திக்கு வரமுடியவில்லை என்று அவரது சட்டத்தரணி மன்றில் தெரிவித்தார். எனினும் அதற்கான மருத்துவ அறிக்கையை அவர் சமர்ப்பிக்கவில்லை.

வழக்காளி சாட்சியம் அளிப்பதற்கு ஏற்கனவே பல சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டு, இது கடைசிச் சந்தர்ப்பம் என்று குறி;ப்பிடப்பட்டபோதும் அவர் நீதிமன்றத்திற்கு வரவில்லை என்பதை எதிர்த் தரப்பு சட்டத்தரணி முன்வைத்தார். இருதரப்பினரின் வாதங்களையும் பரிசீலித்த நீதிவான், சாட்சியைக் கைது செய்யப் பிடியாணை பிறப்பித்து, விசாரணையை ஜனவரி 23க்கு ஒத்தி வைத்தார்.

## மாவீரர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்த்துரைகள் மட்டப்படுத்தப்பட்டன.

இதனை அவதானித்த சபை முதல்வர் அமைச்சர் பிமல் ரத்நாயக்க, கட்சித் தலைவர்கள் கூட்டத்திற்காக பிரதிநிதிகள் ஒன்றுகூடியவேளையில் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறிதரனிடத்தில் மன்னிப்புக்கோரினார். எதிர்காலத்தில் இவ்விதமான நடைபெறாது என்றும் தெரிவித்தார்.

இதனையடுத்து நடைபெற்ற முதலாவது கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் டிசெம்பர் மாதத்தில் ஆரம்பமாகவுள்ள முதலாவது நாடாளுமன்ற அமர்வுக்கான நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பது தொடர்பான நாடாளுமன்ற அலுவல்கள் கூட்டம் பற்றிக் கலந்துரையாடப்பட்டது.

ஆளும் தரப்பினால் இந்தக் கூட்டத்தை நவம்பர் 26, 27 ஆகியவற்றில் ஒரு நாளில் நடத்தலாம் என்று ஆளும் தரப்பில் முன்மொழியப்பட்டது. அந்த இரண்டு நாள்களும் மாவீரர் தினத்தின் முக்கியமான நாள்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் சுட்டிக்காட்டினார். அதனால் அத் தினங்களில்தன்னால்கூட்டத்தில்பங்கெடுப்பது சிரமமானது என்றும் தெரிவித்தார்.

இதனையடுத்து நவம்பர் 28 மாலை நாடாளுமன்ற அலுவல்கள் குழுவைக் கூட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாவீரர் நாளால் கூட்டத்தில் பங்கேற்க முடியாது என்ற சிறிதரன் கூறியபோதும் அது குறித்துக் கட்சித் தலைவர்கள் எந்த எதிர்வினையும் ஆற்றவில்லை என்று கூறப்பட்டது.

## நாணய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மறுசீரமைப்பதற்கு ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு நாம் தயாராக இருக்கின்றோம் - என்றார்.

## எதிர்க் கட்சி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுத் தொடக்க நாள் என்பதால் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஆசன ஒதுக்கீடுகள்மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. உறுப்பினர்கள் எங்கும் அமர்ந்துகொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

காலையில் நாடாளுமன்றத்திற்கு வந்திருந்த யாழ். மாவட்ட உறுப்பினர் மருத்துவர் அருச்சுனா, முதல் வரிசையில் எதிர்க் கட்சித் தலைவர் அமரும் ஆசனத்தில் சென்று அமர்ந்தார். இதைப் பார்த்துப் பதறிய நாடாளுமன்றப் பணியாளர்கள் அவரை அந்த இடத்திலிருந்து விலகி வேறு ஏதாவது ஓர் ஆசனத்தில் அமரும்படி வேண்டுகோள் விடுத்தனர்.

"நான் நாடாளுமன்றத்திற்குப் புதியவன். இந்த ஆசனம் எதிர்க் கட்சித் தலைவருக்கு ஒதுக்கப்பட்டிருப்பதாக எந்தக் குறிப்பும் இல்லை. உள்ளே சென்று எங்கு வேண்டுமானாலும் அமருங்கள் என்றதானே சொல்லி அனுப்பினார்கள்" என்று அருச்சுனா பணியாளர்களுடன் தர்க்கம் செய்தார்.

நாடாளுமன்றத்தின் முதல் நாளில் உறுப்பினர்கள் எங்கு வேண்டுமானாலும் அமராலம் என்பதுதான் நடைமுறை என்றாலும் ஜனாதிபதி, பிரதமர், எதிர்க் கட்சித் தலைவரின் ஆசனங்களில் மற்றவர்கள் அமர்வதுவழமையல்லஎன்றுபணியாளர்கள் விளங்கப்படுத்த முயன்றனர். அந்த வழமையை மாற்றத்தானே இங்கு வந்திருக்கின்றோம் என்று கூறிய மருத்துவர் அருச்சுனா, அமர்வு முடியும் வரை அந்த இடத்தைவிட்டு நகரவில்லை.

இதனால் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நாடாளுமன்றத்தின் உறுப்பினர்களுக்கான இருக்கை ஒன்றில் அமர்ந்து அமர்வில் பங்கேற்றார். தனது இருக்கை அது என்று அவர் உரிமை கோர முற்படவில்லை.

அத்துடன் நாடாளுமன்ற உறுப்பினர் அருச்சுனா இந்த நிகழ்வுகளைத் தனது கையடக்கத் தொலைபேசி ஊடாக நேரலை செய்ததுடன் சத்தியப்பிரமாண ஆவணங்களையும் படம் பிடித்துக் கொண்டிருந்தார்.

முற்பகல் சபை ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் கூடியபோதும் அ-ருச்சுனா எதிர்கட்சித் தலைவரின் ஆசனத்திலேயே மீண்டும் வந்து அமர்ந்தார். அப்போது அவரிடம் வந்த படைக்கல சேவிதர் அது எதிர்கட்சித் தலைவரின் ஆசனம் என்று கூறினார். அவர்களுடன் முரண்பட்டதுடன் ஆசனத்திலிருந்துஎழுந்திருக்கமறுத்துவிட்டார்.

அ-ருச்சுனாவின் நடவடிக்கையை ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் வேடிக்கையுடன்பார்த்துச்சிரித்துக்கொண்டனர். அந்த சந்தர்ப்பத்தில் மீண்டும் சபைக்குள் பிரவேசித்த எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாசவேறு ஆசனத்திலேயே அமர்ந்தார்.

சபையில்கஜேந்திரகுமார்பொன்னம்பலம், ஶ்ரீதரன்,செல்வம்அடைக்கலநாதன்ஆகியோர் முன்வரிசையில் அமர்ந்திருந்திருந்தனர். நாமல் ராஜபக்ச, ரவி கருணாநாயக்க, ரோஹித அபேகுணவர்தன ஆகியோரும் முன்வரிசையில்அருகருகேஅமர்ந்திருந்தனர். கட்சிகளின் நாடாளுமன்ற தலைவர்களுக்கு எதிர்க் கட்சிப் பக்கத்தின் முதல் வரிசையில் ஆசனங்கள் ஒதுக்கப்படுவதே வழமை. அந்தப் பாரம்பரியத்தின் அடிப்படையிலேயே அவர்கள் முன் வரிசையில் அமர்ந்திருந்தனர். சுயேச்சைக்குழுவைச்சேர்ந்தவர்என்றபோதும் மருத்துவர் அருச்சுனாவிற்கும் எதிர்க் கட்சிப் பக்கம்முன்வரிசையில்ஆசனம்ஒதுக்கப்படும்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

காலைக்கதிர்
Kalaikkathir

# ஹெரோயின் வழக்கிலிருந்து சந்தேகநபருக்கு விடுதலை

## வவுனியா மேல் நீதிமன்றம் தீர்ப்பு

1984 ஆண்டு 13 ஆம் இலக்க நச்சு வகைகள் அபின் மற்றும் அபாயகரமான ஔடத வகைகள் (திருத்த) சட்டத்தால் திருத்தப்பட்ட நச்சு வகைகள் அபின் மற்றும் அபாயகரமான ஔடத வகைகள் கட்டளை சட்டத்தின் கீழ் போதைப்பொருள் சட்டத்தின் 54 அ (ஆ) பிரிவு போன்ற குற்றங்களுக்காக தீங்கு விளைவிக்கும் கெரோயின் 16 கிராம் 40 மில்லி கிராம் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்தமைமற்றும்உடைமையில்வைத்திருந்து வியாபாரம் செய்தமை என்று குற்றஞ்சாட்டப்பட்ட நபரின் குற்றச்சாட்டை நிரூபிக்கத் தவறியமையால் குற்றமற்றவர் என தெரிவித்து வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் அவரை விடுவித்தார்.

வவுனியாதரணிக்குளம்காத்தார்சின்னக்குளத்தை சேர்ந்த தியாகராஜா கிரிசாந்த் ஆகிய சந்தேக நபரே இவ்வாறு விடுவிக்கப்பட்டார்.

கடந்த 2020 ஆண்டு ஆவணி மாதம் வவுனியா போதைத் தடுப்பு பிரிவினரால் தீங்கு விளைவிக்கக் கூடிய கெரோயின் 16 கிராம் 40 மில்லி கிராம் உடைமையில் வைத்திருந்தார் மற்றும் உடைமையில் வைத்திருந்து வியாபாரம் செய்தார் என்று கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய குறித்த நபர் கைது செய்யப்பட்டு பொலிஸ் விசாரணையின் அடிப்படையில் வவுனியா நீதிவான் நீதிமன்றில் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கு தொடர்பில் நீதிமன்றில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் பிணை விண்ணப்பம் கோரப்பட்ட போதும் பிணை விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது.

பிணை வழங்கும் நியாஜாதிக்கம் இந் நீதிமன்றத்துக்கு இல்லை என்பதாலும் உயர் நீதிமன்றத்துக்கு செல்ல வேண்டிய பிணை விண்ணப்பம் என்பதாலும் பிணை நிராகரிக்கப்பட்டு தொடர்ந்து விசாரணை இடம்பெற்று பின்பு இரசாயன பகுப்பாய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டு சட்டமா அதிபர் திணைக்கள ஆலோசனைக்கு அனுப்பப்பட்டது.

குறித்த எதிரிக்கு எதிராக நீதிவான் நீதிமன்றில் விசாரணைகள் நிறைவுபெற்று 2022.10.20 அன்று சட்டமா அதிபர் திணைக்களத்தால் இரண்டு குற்றச்சாட்டுக்கள் அடங்கிய குற்றப் பகிர்வு பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. 10 கிராம் 0.6 மில்லிகிராம் அளவைக் கொண்ட கெரோயினை தன் உடைமையில் வைத்திருந்தார்மற்றும்உடைமையில் வைத்து வியாபாரம் செய்தார் என்று குற்றஞ்சாட்டு வழக்கு வவுனியா மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வந்த நிலையில் மன்று கேட்டதற்கமைய எதிரி தான் குற்றவாளி இல்லை என மன்றுக்குத் தெரிவித்தார்.

மன்று கேட்டதற்கமைய விளக்கம் நடைபெற்றது. எதிரி சார்பாக சிரேஸ்ட சட்டத்தரணி யூ.ஆர்.டி. சில்வா மற்றும் சட்டத்தரணி அக்மல் ஆகியோர் ஆஜராகி இருந்தனர். சட்டமா அதிபர் திணைக்களம் சார்பாக ஆறுமுகம் தனுஷ்காந்த் ஆஜராகி விளக்கம் நடைபெற்றது.

1984ஆண்டு13 ஆம் இலக்க நச்சு வகைகள்அபின்மற்றும்அபாயகரமான ஔடத வகைகள் (திருத்த) சட்டத்தால் திருத்தப்பட்ட நச்சு வகைகள் அபின் மற்றும் அபாயகரமான ஔடத வகைகள் கட்டளை சட்டத்தின் கீழ் போதைப்பொருள் சட்டத்தின் 54அ(ஆ) பிரிவுபோன்ற குற்றங்களுக்காககைது செய்யப்பட்டு குற்றம் புரிந்துள்ளதான எதிரிக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தின் அரச தரப்பு வழக்கு தொடுநரால் சந்தேகத்துக்கு அப்பால் நியாயமான ஆதாரங்களை நிரூபிக்கக் கூடிய குற்றச்சாட்டுக்களை சமர்ப்பிக்கத் தவறியமையால் நேற்று தீர்ப்புக்காகத் தவணையிடப்பட்டிருந்தது.

அதற்கமைய தீர்ப்பை அறிவித்த மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ் செழியன் எதிரியை குற்றமற்றவர் என விடுவித்து தீர்ப்பளித்தார்.

குறித்த வழக்கில் இரசாயன பகுப்பாய்வு அறிக்கையில் சட்டமா அதிபர் திணைக்களத்தால் இரண்டு குற்றச்சாட்டுக்கள் அடங்கிய குற்றப் பகிர்வு பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. 10கிராம்0.6மில்லிகிராம்அளவினைக் கொண்ட கெரோயினை தன் உடைமையில்வைத்திருந்தார்மற்றும் உடைமையில் வைத்து வியாபாரம் செய்தார் என்று குற்றஞ்சாட்டு வழக்கு தவிர்ந்துஎவ்விதமானசான்றிதழ்களும் வழக்கு தொடுனரான சட்டமா அதிபர் திணைக்களத்தின் அரசதரப்பு வழக்கு தொடுனரால் சந்தேகத்துக்கு அப்பால் சமர்ப்பிக்க தவறியுள்ளதாக நீதிபதி மா.இளஞ்செழியன் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளதுடன் அரச தரப்பின் நியாயமான சந்தேகங்களிற்கு அப்பால் தவறு இழைக்கப்படவில்லை என்ற அடிப்படையில் 1984 ஆண்டு 13 ஆம் இலக்க நச்சு வகைகள் அபின் மற்றும் அபாயகரமான ஔடத வகைகள் (திருத்த) சட்டத்தால் திருத்தப்பட்ட நச்சு வகைகள்அபின்மற்றும்அபாயகரமான ஔடத வகைகள் கட்டளை சட்டத்தின் கீழ் போதைப்பொருள் சட்டத்தின் 54 அ (ஆ) பிரிவு போன்ற குற்றங்களுக்கான கட்டளை சட்டத்தின் பிரகாரம் தீர்ப்பளிக்கப்பட்டுஎதிரி குறித்தவழக்கில் இருந்து விடுவிக்கப்படுகிறார் என அறிவித்தார். (100)

# கல்முனை சாஹிராவில் பழைய மாணவர்களால் மலசல கூடங்கள் மறுசீரமைத்துக் கையளிப்பு



(ஸாகிர்)

நடைபெற்ற இந்நிகழ்வில் 94 ஓ.எல். பிரிவிலும் 97 ஏ. எல். பிரிவிலும் கல்வி கற்ற பழைய மாணவர்களான எம்.எம்.எம். அம்ஸத், ஏ.எச். பௌசுல் அமீன், ஏ.சீ.ஏ. மஸாஹிர், ஏ.ஆர்.எம். றீசா ஆகியோர் கலந்து கொண்டு அதனை உத்தியோகபூர்வமாக அதிபர், ஆசிரியர் குழாம் மற்றும் மாணவர்கள் பாவனைக்கு உதவும் வகையில் கையளித்தனர்.

கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையில் 94 - 97 பழைய மாணவர்களால் ஒரு தொகுதி மலசல கூடங்கள் (16 மலசலகூடங்கள்) நவீன வசதிகளுடன் புனர் நிர்மாணம் செய்து கையளிக்கும் முதல் கட்ட வைபவம் புதன்கிழமை பாடசாலையில் இடம்பெற்றது.

கல்லூரியின் அதிபர் எம். ஐ. ஜாபிர் தலைமையில்

இப்பாடசாலையில் சுமார் ஒரு கோடியே 40 லட்சத்திற்கும் மேற்பட்ட செலவில் 40 மலசல கூடங்கள் நவீன முறையில் புனர்நிர்மாணம் செய்து கையளிக்கப்படவுள் ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் பாடசாலையின் முகாமைத்துவக் குழு மற்றும் பகுதித் தலைவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.





# வவுனியா வடக்கில் வெடிக்காத நிலையில் மோட்டார் செல் மீட்பு




வவுனியா வடக்கு, அனந்தர் புளியங்குளம் பகுதியில் வெடிக்காத நிலையில் மோட்டார் செல் ஒன்று நேற்று மீட்கப்பட்டது.

குறித்த பகுதியில் அமைந்துள்ள தனியார் காணி ஒன்றை துப்புரவு செய்ய முயன்றபோதே குறித்த செல் கண்டு பிடிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு தெரிவிக் கப்பட்ட நிலையில் சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் அதனை செயலிழகச்செய்வதற்கான நடவடிக்கையில் ஈடுபட் டுள்ளனர். (100)

# ஆலய தரிசனத்தில் ஈடுபட்டார் திருமலை எம்.பி. குகதாசன்





(ஹஸ்பர்)

தம்பலகாமம் ஆதிகோனேஸ்வரர் ஆலயத்திற்கு சென்று வணக்க வழிபாட்டில் திருக்கோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கதிரவேலு சண்முகம் குகதாசன் ஈடுபட்டார்.

இதனைதொடர்ந்துபுதுக்குடியிருப்பு பகுதியில் மக்கள் சந்திப்பில் ஈடுபட்ட ச. குகதாசன் மக்களுக்கு நன்றிகளை தெரிவித்துக் கொண்டதுடன் பிரதேச அபிவிருத்திக்கு தன்னாலான பங்களிப்புக்களை செய்வதாகவும் இதன்போது தெரிவித்தார்.

அவர்களுடன் தம்பலகாமம் பிரதேசசபை முன்னாள் உபதவிசாளர் விஜயகுமார், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் க.பாலசந்திரன், தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள், நலன்விரும்பிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இனியாவது ஒரு ஒழுங்குக்கு வருமா?

மாவீரர்கள் வாரம் நேற்றும் தொடங்கியுள்ளது. வழக்கமான அரசியல் தடைகள், எச்சரிக்கைகள், நீதிமன்ற ஆணைத் தேடல்கள் இன்றி மாவீரர்களை நினைவேந்துவதற்கான வாய்ப்பும், வெளியும் திறக்கப்பட்டிருக்கின்றன போன்ற தோற்றப்பாடு தெரிகிறது. ஒருபுறத்தில் விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் மீதான புலனாய்வாளர்களின் கண்காணிப்பு இறுக்கமடைந்திருந்தபோதும், மாவீரர் நாளுக்கான வெளிப்படையான எதிர்ப்புக்களைக் காணமுடியவில்லை.

இதுவரையும் மாவீரர் நாளையும் வாரத்தையும் நினைவேந்துவதற்கான உரிமைக்கான போராட்டமே ஒரு நிகழ்வாக அமைந்திருந்தது. இன்று அது கடக்கப்பட்டிருக்கும் நிலையில் மாவீரர் நாளை ஒழுங்கமைத்து ஒரு தேசிய நிகழ்வாக வடக்கு கிழக்கு தமிழர்களை ஒருங்கிணைக்கும், தேரசத் திரட்சியாகக் கட்டியெழுப்பும் நிகழ்வாக மாற்றியமைப்பதற்கான பதையைத் தமிழ் இனம் இனியாவது முன்னெடுத்துச் செல்லுமா? மாவீரர் நாளை மட்டுமல்ல மே 18 முள்ளிவாய்க்கால் தினத்தையும் இதுபோன்று தமிழ்த் தேசத் திரட்சியின் கட்டுமானத்திற்கான அடிக்கல்லாக மாற்றுவதற்கான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்படுமா?

கடந்த காலங்களில் தியாகி திலீபனின் நினைவேந்தலையும் மாவீரர் நாள்களையும் செய்வதற்கு முரண்பட்டு, சண்டை போட்டு எம்மை நாமே கேவலப்படுத்திக்கொண்ட சம்பவங்களைப் பார்த்திருக்கின்றோம். புலம்பெயர் தேசத்தில் இருந்து அவரவர் தாம் நினைத்த, விரும்புகின்ற தரப்புக்கைளக் கொண்டு இங்கு ஒரு நிகழ்வை, தம்மை முன்னிலைப்படுத்தி மேற்கொள்வதையும் பணத்திற்காக அவர்களுக்கு இங்குள்ளவர்கள் அடிபணிந்து போவதையும் கண்டிருக்கின்றோம். அவை எல்லாவற்றையும் தவிர்த்து இத்தகைய பொது நிகழ்வுகளுக்கான நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்கும் நிகழ்வுகளை ஒழுங்குபடுத்துவதற்குமான பொது அமைப்புக்கள் எல்லாத்தரப்புமக்களாலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் ஏற்படுத்தப்படுவதே இன்றைய காலத் தேவை.

எதிர்ப்பதுமட்டுமே அரசியல் என்கிற இடத்தைவிட்டு நகர்ந்து இனிவரும் காலங்களிலாவது நாம் முன்னேற்றகரமான அரசியலை நோக்கிச் செல்லவேண்டுமானால், தமிழ்த் தேசியத்தையும் தாயகத்தையும் இருப்பையும் பாதுகாக்க வேண்டுமானால் ஒழுங்கமைக்கப்பட்ட பாதையொன்றில் நாம் முன்னேற வேண்டியது மிக மிக அவசியம். அதன் முதற்படியாக மாவீரர் நாளுக்குரிய பொதுக்கட்டமைப்பை இந்த ஆண்டே நிறுவி நிறுவனமயப்படுத்துவது அவசியம்.

# இருட்டை கொண்டு ஓட்டை அடைக்க

**என்.சத்தியமூர்த்தி**

நாடாளுமன்ற தேர்தல் முடிந்த கையோடு, தமிழர் பகுதிகளில் தமிழ் வாக்காளர்கள் 'தமிழ் தேசியம்' பேசி வயிறு வளர்த்து வந்த தலைவர்கள்



மற்றும் கட்சிகளுக்கு கொடுத்த சாட்டையடியை இல்லை என்று சொல்ல புதிய வியாக்கியானங்கள் வெளிவரத் தொடங்க உள்ளன. அதிலும் குறிப்பாக, புலம்பெயர்ந்தோர் தரப்பு தொல்லியல் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு இல்லாத உண்மையை இருப்பதாகப்



பெரும்முயற்சி மேற்கொண்டுள்ளனர்.

அவர்களின் ஆராய்ச்சி முடிவுகளின்படி, 'தமிழ் தேசியம்' பேசும் அரசியல் கட்சிகளின் மொத்த வாக்குகளையும் கூட்டி-கழித்து பார்த்தால், அந்த





எண்ணிக்கை, ஆளும் தேசிய மக்கள் சக்தியின் வடக்கு மாகாண வாக்குகளைவிட அதிகம். அந்த வாக்குகளும்கூட, 'தமிழ் தேசியம்' பேசுவோரின் எதிரணியினர் மற்றும் தென்னிலங்கையில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள கட்சியினரின் வாக்குகளே. தேசிய மக்கள் சக்திக்கு என்று வடமாகாணத்தில், அதிலும் குறிப்பாக தமிழரின் கலாசார தலைநகரான யாழ்பாணத்தில் அதிக அல்லது அதீத ஆதரவு இல்லை.

இதுதானே உண்மையான நிலைமையும்கூட. ஆனால், மக்களால் அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கையை புரட்டிப்போட்டு ஒரு புதிய, புதின வியாக்கியானத்தை, இந்த புலம்பெயர்ந்தோரால் மட்டும்தான் கொடுக்க முடியும். வடிவேலு பாணியில் கூறுவது என்றால், 'ஏரும் போட்டு தான் யோசிப்பாங்களோ!'

என்ன, இந்த முறை, அவர்கள் 'ஏரும்' போடுவது எல்லாம் மேலைநாட்டு தலைநகர்களில் இல்லை. நிச்சயமாக, யாழ்பாணத்தில் இல்லை. ஏன், தலைநகர் கொழும்புவில்கூட இல்லை. அப்படி இருந்திருந்தால், அவர்கள் பிறரை குறைகூறுவது போல், ஒட்டு கட்சிகளையும், ஒட்டுண்ணி கட்சிகளையும் களத்தில் இறக்கி, வேடிக்கை பார்த்திருக்க மாட்டார்கள். மாறாக, தமிழர்களின் முக்கிய கட்சிகளை ஒருங்கிணைத்து களத்தில் இறக்க முயற்சிகளை மேற்கொண்டிருப்பார்கள்.

### அதிர்ச்சி வைத்தியம்

இன்னும் சொல்லப்போனால், இதுதானே இந்த தேர்தல் முடிவு கற்பிக்கும் பாடம்! அதாவது. 'தமிழ் தேசியம்' பேசும் கட்சிகள், கவைக்கு உதவாத தனிநபர் சித்தாந்தங்களில் சிக்கிக் கொண்டதால்தானே. தமிழ் வாக்காளர்களும் அவர்களுக்கு இந்த அதிர்ச்சிவைத்தியம் கொடுத்துள்ளார்கள்! ஆனால், நம்மவர்கள் மட்டும் அந்த பாடத்தை கற்றுக்கொள்ளவே மாட்டார்கள்.

அதைவிட குறிப்பாக, இந்தமுறை, வழமையான அவர்களது வசனம் இன்னமும் வெளிப்படவில்லை. 'மீண்டும் பிழை விட்டோம்' என்ற அவர்களது தாரக மந்திரத்தை யாருமே இதுவரை உச்சரிக்காதது, ஆச்சரியமான விடயம்தான். அதைவிட, அவர்கள் எதிர்கொண்ட அதிர்ச்சியில் இருந்து அவர்கள் இன்னமும் மீளவில்லை என்ற உண்மையின் உணர்வே இந்த மௌனம்.

ஒரு விதத்தில், தேர்தலுக்கு முன்னரே தாங்களும் தாங்கள் சார்ந்திருக்கும் அல்லது தோற்றுவித்திருக்கும் கட்சியும் கரை தேறாது என்பது அவர்களுக்கே தெரிந்த விடயம்தான். என்றாலும், தேர்தல் முடிவு என்று வந்த பின், அந்த உண்மை சுடுகிறது.

தங்களுக்கு இனி அரசியல் எதிர்காலம் இல்லவே இல்லை என்ற உண்மையை அவர்களால் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை. இதுதான் தங்களது கடைசி தேர்தல் வெற்றி என்று களம் இறங்கிய அவர்களில் சிலருக்காவது, இன்று இதுவே அவர்களின் அரசியலில் முடிவுறாத கடைசி அத்தியாயம் என்று புரியும்போது, அதனை தாங்கிக்கொள்ளும் சக்தி இல்லை.

என்ன, அவர்கள் அனைவரும், முதியோர் அரசியல் இல்லம் ஒன்றைத் தொடங்கி, அங்கு சொக்கட்டான் ஆடுவதற்கே லாயக்கானவர்கள். ஆனால், அங்கு போனாலும் அவர்களில் பலரும் பாம்பு - -ஏணி விளையாட்டையே விரும்பி, அதிலாவது ஒருவரை ஒருவர் வெட்டி வீழ்த்திக் கொள்ள முடிகிறதா, என்றே முயல்வார்கள். தற்போதைய 'வீடியோ கேம்ஸ்' காலகட்டத்தில், ஒருவொரை ஒருவர் வீழ்த்திக் கொள்ளும் கம்ப்யூட்டர் விளையாட்டுகளுக்கும் பஞ்சமே இல்லை.

### நான் ரெடி, நீ ரெடியா?

சரி, இந்தத் தேர்தலில் தமிழ் வாக்காளர்கள் அளித்த செய்திதான் என்ன? புலம்பெயர்ந்த ஆராய்ச்சியாளர்களின் கூற்றுப்படியே பார்த்தாலும், தென்னிலங்கையின் பிற கட்சிகள் மற்றும் வட மாகாணத்தில் உள்ள ஒட்டு கட்சிகளின் வாக்குகளை எல்லாம் ஒரு சேர தேசிய மக்கள் சக்திக்கு அளித்ததன் மூலம், அந்த வாக்காளர்கள், தேசிய அரசியல்

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர்
Kalaikkathir

# இருட்டை கொண்டு ஓட்டை அடைக்க

4ம் பக்கதொடர்ச்சி ..........

நீரோட்டத்தில் ஒட்டு மொத்தமாக ஒரே கட்சியின் பின்னால் இந்த ஒரு முறையாவது நிற்பதை சுட்டிக்காட்டி உள்ளனர்.

அதாவது, 'நான் ரெடி, நீ ரெடியா?' என்ற வகையில், இன்னமும் 'தமிழ் தேசியம்' பேசும் கட்சிகளுக்கு, இந்த வாக்காளர்கள் சவால் விடுத்துள்ளார்கள். அல்லது, அவர்களை வம்புக்கு இழுத்திருக்கிறார்கள். 'தமிழ் தேசியம்' பேசும் கட்சிகளுக்கு எதிராக தாங்கள் ஒருமுகப்படுத்தி தங்களது வாக்குகளை அளித்தது போல், அந்தக் கட்சிகளும் கொள்கை ரீதியாக ஒன்றாகச் செயல்படுவீர்களா, என்பதே அவர்களுக்கு விடுக்கப்பட்டுள்ள சவால்.

இந்தப் பின்னணியில், 'தமிழ் தேசியம்' பேசும் ஆராய்ச்சியாளர்களின் கட்டுரைகள், அந்தக் கட்சிகள் ஒருங்கிணைந்து செயல்படுவதற்கு வழிவகை செய்யும் என்றால், அது வரவேற்கப்பட வேண்டிய முன்னெடுப்பு. அந்த வகையில், தேசிய மக்கள் சக்திக்கு அளிக்கப்பட்ட வாக்குகள் 'தமிழ் தேசிய' கருத்தியலுக்கு எதிரானது அல்ல என்பதையும் புரிந்து கொள்ளவேண்டும், ஏற்றுக்கொள்ளவேண்டும்.

இந்த விதத்தில், 'ஒட்டு அணிகள்' என்று முத்திரை குத்தப்பட்ட கட்சிகளுக்கு வாக்களித்த தமிழர்கள், காலம்காலமாக அனுப்பி வரும் 'மெஸேஜ்' ஒன்று உள்ளது. 'தமிழ் தேசியம்' இருக்கட்டும். அடுத்த வேளை சாப்பாட்டிற்கு, 'தமிழ் தேசிய' கட்சிகள் என்ன கூறுகிறார்கள்?' என்பதே அவர்களது தொடர்ந்து வரும் அறைகூவல்.

## கண்டும் காணாதது போல்...

இதனை கண்டும் காணாதது போல், கேட்டும் கேட்காதது போல் பாவனை செய்து வந்த வித்தைக்கு, இந்தமுறை அந்த வாக்காளர்கள் ஆப்பு அடித்துள்ளார்கள். அத்துடன் முறைகேடான அரசியல் என்ற அடிநாதத்திற்கு எதிராக தென்னிலங்கை ஜனாதிபதித் தேர்தலில் தெரிவித்த முடிவை தற்போது, வட மாகாண தமிழர்களும் பின்பற்றி உள்ளார்கள்.

2022ஆ-ம் ஆண்டில் தென்னிலங்கையில் அரங்கேறிய அரகலய போராட்டத்திற்கு தமிழர் பகுதிகளில் ஆதரவு இருக்கவில்லை. ஏன், நம்மவர்கள் அந்தப் போராட்டத்தை தள்ளி இருந்து வேடிக்கை பார்த்தார்கள். கைகொட்டிச் சிரித்தார்கள். 'தமிழ் தேசியம்' பேசும் அரசியல்வாதிகள் பகடி செய்தார்கள்.

அதற்கு ஒரு படி மேலே போய், தாங்கள் முப்பது ஆண்டுகளாக பட்ட அவஸ்தைகளில் ஒரு சிறு பகுதியைக்கூட தென்னிலங்கை மக்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை என்ற அளவில் பரப்புரைகூடச் செய்து பார்த்தார்கள். உண்மை என்னவோ, வடக்கு -கிழக்கு மக்கள் இந்த பகடி வேலைக்கும் மடியவில்லை என்பதுதான்.

சுமந்திரன் மற்றும் சாணக்கியன் ஆகியோர், கொழும்பு காலிமுக திடலில், அரகலய போராட்ட களத்தில் பிரச்சனமாகி, அவர்களுக்குதங்களதுதார்மீகஆதரவைகூடத்தெரிவித்தார்கள். அதற்காக அவர்கள் வடக்கே குறை சொல்லப்பட்டார்கள். அவர்கள் அரகலயா போராட்டத்திற்கு அளித்த ஆதரவிற்கும் தமிழர் மத்தியில் எந்தவித 'ரியாக் ஷனும்' இருக்கவில்லை.

## குசும்பு புத்தி

இன்று, நாடாளுமன்ற தேர்தல் முடிவுகளுக்கு பின்னரும் பழைய பல்லவியைப் பாடும் தமிழ் தலைவர்கள், தங்களது வழிமுறைகளை மாற்றிக்கொண்டதாக தெரியவில்லை. தமிழ் அரசு கட்சியில், தேசிய பட்டியல் தேர்விற்கு மாவை சேனாதிராஜா ஆசைப்பட்டதில் அது வெட்டவெளிச்சம். தேர்தலில் மக்களால் நிராகரிக்கப்பட்ட மருத்துவர் சத்தியலிங்கத்தை தேசிய பட்டடியலுக்கு தேர்ந்தெடுத்ததும் அதன் வெளிப்பாடே.

இன்னமும், தமிழ் அரசுக் கட்சிக்கு மொத்தம் எட்டு ஆசனங்களைக் கொடுத்து, வடக்கு- கிழக்கு வாழ் தமிழ் மக்கள் தங்களது மனநிலையை உணர்த்தி விட்டார்கள் என்று மார்தட்டி கொள்வது, வெட்கப்பட வேண்டிய விடயம். காரணம், வடக்கில் தேசிய மக்கள் சக்திக்கு கிடைத்த ஆசனங்களே விவாதப் பொருளாக இருந்திருக்கவேண்டிய காலகட்டத்தில், இவ்வாறு குறுக்குசால் ஓட்டுவது யாழ்பாண தமிழர்களுக்கே உள்ள குசும்பு புத்தி, குயுக்தி.

அதுபோன்றே, அனைத்து 'தமிழ் தேசிய' வாக்குகளையும் ஒருங்கிணைத்து அரசியல் பேசும் அறிவாளிகள், நேற்று இரவு வரை, தமிழ் அரசு கட்சியை மட்டம் தட்டியவர்கள். அந்த கட்சியை சிறுமைபடுத்துவதற்காகவே ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளர் என்ற நாடகத்தை அரங்கேற்றியவர்கள், பின்னர், யாழ்ப்பாணத்தில், பழம் தின்று கொட்டை போட்ட பிரகஸ்பதிகள் அவர்களை வைத்து செய்தபோது, அடி வாங்கியும் அழ முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

இல்லை என்றால், இந்த ஒரு ஜனாதிபதித் தேர்தல் பொது வேட்பாளருக்கு மட்டுமே என்று கூறி. தேர்வு செய்த 'சங்கு' சின்னத்தை கேட்டு வாங்கி, அதனை நாடாளுமன்றத் தேர்தலில் தங்களது சின்னமாக அறிவித்துக் கொண்ட ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியினர் இப்படி அசடாக, அசால்டாகத் தோற்றிருக்க மாட்டார்கள். இந்த சித்து வேலைக்கு தான், தமிழ் வாக்காளர்கள், இரு தரப்பினரையும் ஓரம் கட்டி இருக்கிறார்கள்.

யாழ்பாணம் தேர்தல் மாவட்டத்தில் உள்ள தோல்வியை விட்டு தள்ளுங்கள், அடுத்துள்ள வன்னியில் செல்வம் அடைக்கலநாதன் அகில இலங்கையிலுமாக ஆக குறைந்த 5,000 வாக்குகளை பெற்று, 'எங்காத்துகாரரும் கச்சேரிக்கு போறார்' என்ற மட்டில், நாடாளுமன்றம் செல்ல இருப்பது சிறுமையிலும் சிறுமை. கொடுமையிலும் கொடுமை.

எதிர்வரும் காலங்களில், செல்வமோ, சத்தியலிங்கமோ, நாடாளுமன்றத்தில் 'தமிழ் தேசியம்' குறித்துப் பேசுவார்களேயானால், அவர்கள் எல்லாவித கேலிக்கும் உள்ளாவார்கள். அதனால் கேலிப்பொருளாவது, இவர்கள் கூறும் 'தமிழ் தேசியமும்' தமிழ் மக்களுமே.

## கொம்பு சீவி...

அதுபோன்றே, அனைத்து தமிழ் கட்சிகளும் தங்களுடைய வாக்குகளை ஒன்று சேர்த்தால்... என்று வாதம் செய்வோர், கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தையும் பிற தமிழ் கட்சிகளையும் ஒரே நிலைபாடுகளை எடுக்க வைத்துவிட முடியுமா? அல்லது, சிறிதரனையும் சுமந்திரனையும், ஒரே தட்டில் உண்ண வைக்க முடியுமா? அவ்வாறு முடியும் என்றிருந்தால், இது நாள் வரையிலும், அவர்களில் ஒருவரை ஏன் கொம்பு சீவி விட்டுக் கொண்டிருந்தார்கள்?

இந்த இருவரும் சார்ந்த தமிழ் தேசிய கட்சியின் யாழ் தலைமைக்கு மனசாட்சி இருந்திருந்தால், கிழக்கில் இருந்தல்லவா, தங்களது நாடாளுமன்றத் தலைவரை தேர்ந்தெடுத்திருக்கவேண்டும். கட்சியின் மொத்தமுள்ள எட்டு உறுப்பினர்களில் ஐந்து பேர் கிழக்கில்தானே தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

மாறாக, கட்சித் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, திருகோணமலை நீதிமன்றத்தின் முடிவுக்கு காத்திருக்கும் சிறிதரனை, நாடாளுமன்ற குழு தலைவராகவும் தெரிவு செய்திருப்பது, எந்த விதத்தில் நியாயம்? எந்த விதத்தில் மனோதர்மம்?

யாழ்பாணத்தாரின் இந்த பெரிய அண்ணன் முறைமையை எதிர்த்துதானே கருணா, விடுதலை புலிகள் இயக்கத்தில் இருந்து பிரிந்து சென்றார்? அல்லது, பிரிந்து சென்றபோது அவர் அதற்கு கற்பித்த நியாயம் தானே இன்றும் ருசுவாகி உள்ளது?

இவை எல்லாம்தானே, இருட்டை கொண்டு ஓட்டை அடைக்கும் வேலை. அது, தமிழ் அரசு கட்சி என்ற தனியொரு அமைப்பினுள் ஆகட்டும், அல்லது தமிழர் அரசியல் பரப்பு என்ற பரந்து விரிந்த யதார்த்தத்தில் ஆகட்டும், இன்னமும் எத்தனை நாட்கள்தான், தமிழர் தலைவர்கள், இல்லாத ஊருக்கு தொடர்ந்து வழி சொல்லிக் கொண்டிருப்பார்கள்?



காலைக்கதிர் Kalaikkathir

# ஊடகவியலாளருக்கு இலக்கியவித்தகர் விருது

(ஹஸ்பர்)

கிண்ணியாவைச் சேர்ந்த இலக்கியவாதியும், சிரேஷ்ட ஊடகவியலாளரும்,கிண்ணியாவின் முதல்தமிழ் விசேடதுறை பட்டதாரி ஆசிரியருமாக உலாவரும் கலா என்றபுனைபெயரில்அழைக்கப்படும் எச்.எம். ஹலால்தீன் என்பவருக்கு 2024 ஆம் ஆண்டுக்கான "கிழக்கு மாகாண இலக்கிய வித்தகர் விருது" கிடைக்கப்பெற்றுள்ளது.

பெரிய கிண்ணியா 6 ஆம் டிவிஷனைச் அயாத்து முகமது ரோஜா நோனா தம்பதிகளின் நான்காவது புதல்வருமான இவர் ஆரம்பக்கல்வியைபெரியகிண்ணிய ஆண்கள் வித்தியாலயத்திலும் உயர்தரகல்வியைகிண்ணியமத்திய கல்லூரியிலும் கற்றுக்கொண்டார்.

1989 ஆம் ஆண்டு கல்விப் பொதுதராதர உயர்தரப்பரீட்சையில் கலைப்பிரிவில் சித்தியடைந்து பேராதனைபல்கலைக்கழகத்துக்குள் 1991 ஆம் ஆண்டு நுழைந்தார்.

அங்கு அவர் தமிழ் மொழியை விசேட மொழியாக கற்றுக் கொண்டதோடு சில காலங்கள் காலி ருஹூனு கல்வியியல் கல்லூரியில் விரிவுரையாளராகவும் கடமை ஆற்றினார்.

சிறுவயதில் முதல் சமூக சேவை மற்றும் கலை இலக்கிய துறையில் ஆர்வம் கொண்ட இவர் கவிதை, கட்டுரை, சிறுகதை, நாடகம், விமர்சனம், நாட்டார் கலைகட்டில், சிறுவர் இலக்கிய படைப்பு பாடல் ஆக்கம் முதலானவற்றில் ஆர்வம் காட்டியதோடுஎழுதியும்வந்துள்ளார்.

1995 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆசிரியர் போட்டி பரிட்சையில் அதிகூடிய புள்ளிகளை பெற்று ஆசிய நியமத்தை பெற்றுக் கொண்டார்.

பின்னர் 2012 ஆம் ஆண்டுநடத்தப்பட்டதமிழ் மொழி பாடத்திற்கான ஆசிரியர் ஆலோசகர் போட்டிபரீட்சையில் அதிக கூடுதலான புள்ளிகளை பெற்றுகன்னியாவலையக் கல்வி அலுவலகத்தின் ஆசிரியர் ஆலோசகராக பணியாற்றினார்.

ஆசிரியர்ஆலோசகராக கடமை ஆற்றி குறிப்பிட்ட காலப்பகுதிக்கு பின்னர் மீண்டும் ஆசிரியராக புண்ணிய ஆல்மினா மஹா வித்தியாலயத்தில் கடமையாற்றி வருகின்றார்.

2013 ஆம் ஆண்டு சிறுவர் இலக்கிய படைப்புக்காக தேசிய விருதை பெற்றுக் கொண்டதோடு இதுவரைக்கும் 12 தேசிய விருதுகளை பெற்றுள்ளார்.

1997 ஆம் ஆண்டு இவருடைய முதலாவது சிறுகதை தேவி சந்த ரோஜா என்ற தலைப்பில் முதல் முதலாக வெளிவந்தது. இதற்கு முன்னர் சஞ்சிகைகளிலும் ஏனைய வெளியீடுகளிலும் வந்துள்ளன.

1905 ஆம் ஆண்டு பேராதனை பல்கலைக்கழகத்தின் தமிழ்ச் சங்கத்தின்வெளியீடான 'இளங்கதிர்' இதழின் இதழ் ஆசிரியராக செயற்பட்டுள்ளார்.



சீனா இலங்கை நட்புறவுச் சங்கம், ஜப்பான் இலங்கை மேம்பாட்டுச்சங்கம்அகிலஇலங்கை ரீதியில்நடத்தியகட்டுரைபோட்டியில் பங்கு பற்றி பரிசில்களையும் பெற்றுள்ளார்.

வீரகேசரி, சக்தி டிவி,சக்தி எஃப் எம் முதலான வெற்றி பிராந்திய செய்தியாளராகவும் கடமையாற்றி வருகின்றார். அகில இலங்கை சமாதான நீதிவானாகிய இவர் தேச கீர்த்தி, கலைதாரகை முதலான பட்டங்களையும் பெற்றுள்ளார்.

சுமார் 28 வருட கால இலக்கிய பயணங்களின் மூலமாக பெற்றுக்கொண்ட பெறுபேறுகளின் அடைவாகவே கிழக்கு மாகாண 'இலக்கியவித்தகர்விருது' 2024.11.28 ஆம் திகதி திருகோணமலை உவர்மலை விவகானந்தா வித்யாலயத்தில் வழங்கப்பட உள்ளது.

கிண்ணியா கலை இலக்கிய மன்றத்தின் தலைவராகவும் திருகோணமலை மீடியா போரத்தின் தலைவராகவும் செயற்பட்டு வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# 10 ஆயிரம் ஏக்கராக குறைவடைந்தது வவுனியா பெரும்போக நெற்செய்கை





வவுனியா மாவட்டத்தில் இம்முறை பிந்திய மழைவீழ்ச்சி காரணமாக பெரும்போக நெற்செய்கையில் பாரிய வீழ்ச்சிநிலை ஏற்பட்டுள்ளது.

அந்தவகையில், இதுவரையான காலப்பகுதியில்வவுனியாமாவட்டத்தில் உள்ள 9 கமநல அபிவிருத்தி பிரிவுகளினூடாகவும் 10 ஆயிரத்து 51 ஏக்கர் காணிகளில் மாத்திரம் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அவற்றில் மிககுறைவாக உலுக்குளம் பிரிவில் 30 ஏக்கர் செய்கை பண்ணப்பட்டுள்ளதுடன், அதிகபட்சமாக ஓமந்தை பிரிவில் 2489 ஏக்கர் அளவில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இம்முறை பெரும்போகத்திற்கான மழைவீழ்ச்சி பிந்தியமையால் இந்தநிலைமை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுவதுடன், இனிவரும் நாள்களில் மழைவீழ்ச்சிக்கு ஏற்ப 25 ஆயிரத்து 216 ஏக்கர் அளவில் நெற்செய்கை மேற்கொள்ளப்படுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாக மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தால் எதிர்பார்க்கப்படுகின்றது. (100)



காலைக்கதிர்
Kalaikkathir

## சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட

# வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் கொழும்பில் இருவர் கைது

கொழும்பு, புறக்கோட்டை பிரதேசத்தில் சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு சிகரட்டுகளுடன் இரண்டு சந்தேக நபர்கள் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் நீர்கொழும்பு மற்றும் கொழும்பு 12 ஆகிய பிரதேசங்களில் வசிக்கும் 41 மற்றும் 39 வயதுடையவர்கள் ஆவர்.

சந்தேக நபர்களிடமிருந்து சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட 52,800 வெளிநாட்டு சிகரட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக வாழைத்தோட்டம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைத்தோட்டம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சிறைச்சாலை கைதிக்கு ஐஸ் போதைப்பொருள் கொண்டு சென்ற கர்ப்பிணிப் பெண் கைதானார்



புதிய மெகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதி ஒருவருக்கு ஐஸ் போதைப்பொருளைக்கொண்டுசென்றகர்ப்பிணிப்பெண் ஒருவர் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் எனச் சிறைச்சாலை ஆணையாளர் காமினி பீ.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது –

சந்தேக நபரான கர்ப்பிணிப் பெண் புதிய மெகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதி ஒருவரைப் பார்ப்பதற்காகச் சென்றுள்ளார்.

இதன்போது சிறைச்சாலை அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபரான கர்ப்பிணிப் பெண் கொண்டு வந்த உணவுப்பொதியில் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 10 கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக பொரளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொரளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கார் – லொறி மோதி விபத்து ஒருவர் இறப்பு: மூவர் காயம்



குருணாகல் – ஹிரிபிட்டிய வீதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மூவர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து புதன்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த கார் ஒன்று எதிர்த்திசையில் பயணித்த லொறியுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்துக்குள்ளான காரின் சாரதி மது போதையில் இருந்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

விபத்தின் போது காரில் பயணித்த மூவரும் லொறியின் சாரதியும் காயமடைந்துள்ள நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் காரில் பயணித்த நபரொருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

# தன் நியமனம் சட்டபூர்வமானது என்கிறார் ரவி கருணாநாயக்க

புதிய ஜனநாயக கட்சியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக தான் நியமிக்கப்பட்டமை சட்டபூர்வமானது என ரவி கருணாநாயக்கதெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தை ஒருசிலரே பெரிதுபடுத்துகின்றனர் முழு கட்சியும் இதனை ஒரு விடயமாக கருதவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கியதேசிய கட்சியை மீளகட்டியெழுப்புவது குறித்தும் சரியான வழியில் அதனை வழிநடத்தி, வலுவான அரசியல் சக்தியாக மாற்றுவதுமே தன்னுடைய நோக்கம் என அவர் தெரிவித்துள்ளார்.

ஒரு சிலரின் நன்மைக்காக கட்சி பாதிக்கப்படுவதை அனுமதிக்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.



காலைக்கதிர் Kalaikkathir

# மரண அறிவித்தல்



தோற்றம்
1980.06.03

மறைவு
2024.11.19

## அழகசுந்தரம் கிருபாகரன்

(கிருபா சாரதிப் பயிற்சிப் பாடசாலை உரிமையாளர்)

பதுளை மாவட்டத்தைப் பிறப்பிடமாகவும் ஆசீர்வாதப்பர் வீதி, கச்சேரி, நல்லூர், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அழகசந்தரம் கிருபாகரன் அவர்கள் 19.21.2024 செவ்வாய்க்கிழமையன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.11.2014) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் காலை 8 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

காலைக்கதிர்
Kalaikkathir




# ஈழத்து சைவ ஆலயங்கள்



சிவபூமி என திருமூலரால் சிறப்பித்துக் கூறப்பட்ட இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலே இந்து சமயம் குறிப்பாக சைவம் நிலைபெற்று வளர்ச்சியுற்றிருந்தது. இலங்கையின் பூர்வீகக்குடிகளான இயக்கரும், நாகரும் சிவ வழிபாட்டினர் என்பதும் ஈழத்தின் புராதன ஈச்சரமான திருக்கேதீச்சரம் நாகர்களது பிரதான வழிபாட்டுத்தலமாக இருந்ததென்றும் கூறப்படுகின்றது.

ஈழநாட்டின் நாற்புறமும் அமைந்திருக்கும் புராதன ஈச்சரங்களும் இலங்கையின் புராதன இலக்கியங்களான மகாவம்சம் போன்றனவும் புராதன பிராமிக் கல்வெட்டுக்கள், இந்திய இதிகாசங்கள், பிறநாட்டார் குறிப்புக்கள் என்பனவும் இலங்கையில் இந்துசமயம் பற்றிய சான்றாதாரங்களை வெளிப்படுத்துகின்றன. கி.மு 2000 ஆண்டளவில் தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் பெருங்கற்பண்பாடு நிலவியபோது இலங்கையில் வாழ்ந்த மக்களினால் முருக வழிபாடு கைக்கொள்ளப்பட்டமையை புத்தளப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட புதைபொருள்ஆய்வொன்றுநிரூபித்துள்ளது. தென்னிந்தியாவிலுள்ள ஆதிச்சநல்லூரில்கிடைத்தவைபோன்ற வேலாயுதங்களும் சேவற்சிலையும், காவடிச்செதில்களும் மாதோட்டம், கந்தரோடை முதலிய இடங்களிலேயும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. தென்னிலங்கையில் சிறப்புற்று விளங்கும் கதிர்காம முருக வழிபாடும் இதனை நிரூபிக்கின்றது. இலங்கை சரித்திர ஆய்வில் இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம்முதல் சைவசமயமே நிலைபெற்றிருந்தது என்பதற்கு ஆதாரங்கள் காணப்படுகின்றன.

ஈழநாட்டில் வரலாற்றுப் புகழ் மிக்க ஈழத்து சைவ ஆலயங்கள் பல காணப்படுகின்றன. அதில் ஈழநாட்டின் வரலாற்று புகழ்மிக்க முருக வழிபாட்டுத்தலங்களுள் நல்லூர் கந்தசுவாமி கோயிலும் ஒன்றாகும். ஆரிய சக்கரவர்திகளின் வழிபாட்டிற்குரிய கோயிலாக இவ்வாலயம் திகழ்ந்தது. கோட்டை இராச்சியத்தை ஆண்ட 6ம் பராக்கிரமபாகுவின் மகனாகிய செண்பக்பெருமான் காலத்திலேயே நல்லூர் கந்தசுவாமி கோயில் கட்டப்பட்டது. இவ்வாலயம் சிங்கைபரராசசேகரன் ஆட்சிக் காலத்தில் மேலும் சிறப்புப்பெற்றது. இவர் கந்தசுவாமி ஆலயத்தை நடுநாயகமாகக் கொண்டு நான்கு எல்லைகளிலும் நான்கு கோயில்களைக் கட்டினான். வடக்கே சட்டநாதர் கோயிலும் கிழக்கே வெயிலுகந்த விநாயகர் கோயிலும் தெற்கே கைலாசநாதர் கோயிலும் மேற்கே வீரமாகாளி அம்மன் கோயிலும் அமைக்கப்பெற்றன. கோயிலுக்கு அண்மையில் யமுனா ஏரி ஒன்றை அமைத்தான். இவ்வாலயம் பதினாறாம் நூற்றாண்டில் போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்டது. இரகுநாதமாப்பிண முதலியார் என்பவர் அரசிடமிருந்து நிலத்தை வாங்கி அதிலே புதிதாக ஆலயத்தைக் கட்டினார். அதில் மூலவிக்கிரகத்திற்கு பதிலாக வேல் ஒன்றினை மூலமூர்த்தியாகக் கொண்டு அந்த ஆலயம் கட்டப்பட்டது.

ஈழத்து சைவ ஆலயங்களின் நயினை நாகபூஷணி அம்மன் ஆலயமும் முக்கியத்துவம் பெறுகின்றது. இவ்வாலயம் யாழ்ப்பாணக் குடா நாட்டின் தென்மேற்காக உள்ள தீவுகளுள் ஒன்றே நயினாதீவு. இதை நாகதீபம், மணிபல்லவம், மணித்தீவு என்றும் குறிப்பிடுவர்;. இத் தீவிலேயே நாகபூஷணி அம்மன் ஆலயம் அமைந்துள்ளது. இவ்வாலயத்தில் குடிகொண்டிருக்கும் இறைவியை நாகபூஷணி, நாகம்மாள், நாகேஸ்வரி எனப்பல நாமங்களால் போற்றுவர்;. அறுபத்துநான்கு சக்திப்பீடங்களுள் நயினை நாகபூஷணி அம்மன் ஆலயமும் ஒன்றாகும். நாகர் சிவனை முழுமுதற் பொருளாகக் கொண்டு வழிபட்டவர்கள். அவர்களால் அமைக்கப்பட்ட ஆலயங்களுள் ஒன்றே நயினை நாகபூஷணி அம்மன் ஆலயம் என்று கருதப்படுகின்றது. இவ் ஆலயத்தோற்றத்திற்கு கதை ஒன்று உள்ளது. அதாவது நாகம் ஒன்று இத்தீவின் வடக்கே உள்ள புளியத்தீவிலிருந்து நாள் தோறும் பூக்கள் கொண்டுவந்து அம்பிகையைப் பூசித்து வந்தது. ஒருநாள் கருடன் ஒன்று அதை கொல்ல முயன்றது. ஆகவே நாகம் அச்சம் கொண்டு அப்பொழுது அவ் வழியில் வணிகன் அக்காட்சியை கண்டான.; நாகத்தின் மீது அனுதாபம் கொண்டான். நாகத்தை கொல்ல வேண்டாம் என கருடனை வேண்டிக் கொண்டான். அக்கருடன் அவனது செல்வங்களை கேட்க அவனும் கொடுத்து அப்பாம்பை காப்பாற்றினான். பின் வீடு சென்று பார்த்த பொழுது நவரத்தினங்கள் அங்கே இருந்தன. இதிலிருந்து அவன் அம்பிகைக்கு பெருங்கோயில் கட்டினான். அவ்வாலயப் பூசகராக நயினைப் பட்டரை நியமித்தான்.

ஈழத்து சைவ ஆலயங்களுள் மற்றுமொரு ஆலயமாக குறிப்பிடப்படுவது திருக்கேதீஸ்வரம் ஆகும். திருக்கேதீஸ்வரம் மன்னார் மாவட்டத்தில் மாதோட்டத்தில் அமைந்துள்ளது. மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் சிறந்து அமையப்பெற்ற இத்திருத்தலத்தில் இறைவன் கேதீஸ்வரநாதராகவும் இறைவி கௌரி அம்பாளாகவும் வீற்றிருக்கின்றனர். பாலாவி என்று இத்தலத்தில் மகிமை மிக்க தீர்த்தம் சிறப்பிக்கப்பெற்றுள்ளது. நவக்கிரகங்களுள் ஒன்றான கேது வழிபட்ட தலமாதலால் கேதீஸ்வரம் எனும் பெயர் இத்தலத்திற்கு வழங்கலாயிற்று. நாகர்களின் தலையாய வழிபாட்டுதலமாக திருக்கேதீஸ்வரம் விளங்கியதால் நாகநாதர் எனும் பழம் பெயர் ஒன்றும் கேதீஸ்வரப் பெருமானுக்கு வழங்குகின்றது. சோழப் பேரரசர் ஆட்சிக்காலத்திலும், யாழ்ப்பாணத்து அரசர் ஆட்சிக்காலத்திலும் இக் கோயில் அரச ஆதரவைப்பெற்றுச் செழிப்புற்றிருந்தது. போர்துக்கேயர் ஆட்சியில் இத் திருத்தலம் இடித்தழிக்கப்பட்டது. சைவ உலகு விழித்துக் கொண்டது. பசுபதிச்செட்டியார் முதலாய அன்பர்களின் திருப்பணியினால் ஆலயம் மீண்டும் எழுந்தது.

ஈழத்து சைவ ஆலயங்களுள் சிறப்பிடம் பெற்று விளங்குகின்ற ஆலயங்களுள் ஒன்றாக வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம் காணப்படுகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வற்றாப்பளை எனும் ஊரில் இந்த ஆலயம் அமைந்துள்ளது. கண்ணகி மதுரையை எரித்;த பின்னர் ஈழத்துக்கு வந்து பத்து இடங்களில் தங்கியிருந்ததாகவும் பத்தாவது இடமே வற்றாப்பளை என்றும் கூறப்படுகின்றது. இச்செய்தி கண்ணகி அம்மன் பள்ளுப் பாடலில் இடம் பெற்றுள்ளது. பத்தாவதாக இருந்த இடம் என்பதால் பத்தாம்பளை எனப் பெயர் பெற்றுப் பின் வற்றாப்பளை என மருவியது என்பர். இவ்வாலயத்தில் இடம் பெறும் சிறப்பான பெருவிழாவாக வைகாசிப்பொங்கல் விழா அமைகிறது. இப் பொங்கல் விழா ஆகமம் சாரா முறையில் இடம் பெறும். இப் பொங்கற் செயற்பாடுகள் பஞ்சாங்கம் ஆளல், பாக்குத்தெண்டல், தீர்த்தமெடுத்தல், கடல் நீரில் தீபமேற்றுதல், மடைப்பண்டம் எடுத்தல் என்ற ஒழுங்கு முறையில் இடம்பெறும். பொங்களுக்கான நாள் வைகாசிப்பூரணையும்



விசாகமும் கூடிய ஒரு திங்கட்கிழமையன்று வரும். பொங்கல் கிரியைகள் நள்ளிரவு 12 மணிக்கு ஆரம்பமாகும். அம்மனை குளிர்விக்கும் முகமாக திருக்குளிர்த்தி பாடல்கள் பாடப்படும்.

ஈழத்து சைவ ஆலயமாக குறிப்பிடப்படும் மற்றுமொரு ஆலயம் இணுவில் கந்தசுவாமி கோயில் ஆகும். யாழ்ப்பாணத்திற்கு வடக்கே இணுவில் என்ற ஊரில் இக் கோயில் அமைந்துள்ளது. பேராயிரமுடையோன் முதலி என்பவரே இந்த ஆலயத்தை அமைத்தார். இந்த ஆலயத்திற்கு இணுவைக் காஞ்சி என்றும் கந்தகோட்டம் என்றும் பெயர் இருக்கின்றது. இவ்வாலயத்தின் மூலமூர்த்தியாக வள்ளி தெய்வானை சமேத முத்துக் குமாரசுவாமி விளங்குகின்றார். தலவிருட்சமாக நொச்சி மரம் விளங்குகின்றது. இங்கு தினமும் ஆறுகால பூசைகள் இடம்பெறுகின்றன.

இவ்வாறு ஈழநாட்டில் ஈழத்து சைவ ஆலயங்கள் அந்நியர் ஆதிக்கத்தால் ஆரம்பத்தில் சிக்கல்கள் இருந்தாலும் தற்காலத்தில் எல்லா ஆலயங்களும் சிறப்புற்று விளங்குவதைக் காணலாம்.

**த. கஜீனா**

# யாழ்ப்பாணத்தில் பெய்த அடை மழையால் 15 குடும்பங்களை சேர்ந்த 50 பேர் பதிப்பு





தொடர்ச்சியாக பெய்து வரும் மழை அனர்த்தம் காரணமாக யாழ்ப்பாணத்தில் 15 குடும்பங்களை சேர்ந்த 50 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே-315 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த இருவரும், ஜே-328 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். இரண்டு வீடுகள் சேதமடைந்துள்ளன.

அத்துடன் ஊர்காவல்துறை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே-56 கிராம சேவகர் பிரிவில் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த 8 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஒரு வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மூன்று குடும்பங்களைச்



சேர்ந்த ஆறுபேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் இரண்டு வீடுகள் சேதமடைந்துள்ளன. ஜே-403 கிராம சேவகர் பிரிவில் 7 குடும்பங்களைச் சேர்ந்த 29 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 6 வீடுகள் சேதமடைந்துள்ளன.

அத்துடன் நல்லூர் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே-91 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மூவர் பதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்றும் பகுதி அளவில் சேதமடைந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

### சுவிஸ் பிரஜையான வயோதிபப் பெண் மீது தாக்குதல் :

## இரண்டு கோடி ரூபாவுக்கும் அதிகமாக பெறுமதியான பொருள்கள் கொள்ளை

மட்டக்களப்பு - காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லடி பிரதேசத்தில், வீடொன்றில் தனிமையில் தங்கியிருந்த சுவிஸ் நாட்டு பெண் பிரஜையை கடுமையாக தாக்கிவிட்டு, இரண்டு கோடியே 40 லட்சம் ரூபா வெளிநாட்டு நாணயங்கள் மற்றும் 10 கிராம் தங்க சங்கிலி, 29 ஆயிரம் ரூபா இலங்கை நாணயத்தாள்கள் என்பவற்றை கும்பலொன்று கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

புதன்கிழமை மட்டக்களப்பு, கல்லடி, பேபிசிங்கம் வீதியில் அமைந்துள்ள வீட்டில் இந்த தாக்குதல் மற்றும் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

புதன்கிழமை அதிகாலை 12 மணியளவில் அவ்வீட்டினது குளியலறையின் ஜன்னல் கதவை உடைத்து, கொள்ளையர்கள் உள்ளே நுழைந்துள்ளனர்.

அவர்கள் அலுமாரியை உடைத்து, அதிலிருந்த 72 ஆயிரம் சுவிஸ் பிராங் (இலங்கை நாணய மதிப்பில் சுமார் 2 கோடி 40 லட்சம் ரூபா), தங்கச் சங்கிலி, 29 ஆயிரம் ரூபா என்பவற்றை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

அவ்வேளை, கொள்ளையர்கள் வீட்டில் தனிமையில் தங்கியிருந்த 62 வயதான வயோதிபப் பெண்ணை கடுமையாக தாக்கிவிட்டு, பின்னர் கொள்ளையில் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

1990 இல் இந்த பெண் தனது கணவருடன் சுவிஸ் நாட்டுக்கு இடம்பெயர்ந்து சென்றுள்ளார்.

தற்போது கணவரும் மகளும் சுவிஸ் நாட்டில் வசிக்கின்றனர். பெண்ணின் கணவர் பொறியியலாளராகவும் மகள் விஞ்ஞானியாகவும் சுவிஸ் நாட்டில் பணியாற்றுகின்றனர்.

அந்த பெண் சுவிஸ் நாட்டில் தாதியாக பணிபுரிந்து, தற்போது ஓய்வு பெற்றுள்ளார்.

சுவிஸ் நாட்டுப் பிரஜையாக இருந்தபோதிலும் மட்டக்களப்பில் உள்ள தனது வீட்டை பார்வையிடுவதற்காக இலங்கைக்கு வந்து, தனது வீட்டில் தங்கியுள்ளதாக பாதிக்கப்பட்ட பெண் தெரிவித்தார்.

இதனையடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்த காத்தான்குடி பொலிஸார் மற்றும் தடயவியல் சொகோ பொலிஸ் பிரிவினர் மோப்ப நாய்களுடன் தீவிர விசாரணைகளில் இறங்கியுள்ளனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.11.2024இல் வெளியிடப்பெற்றது